இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 - முரசு : 84 - ஒலி : 310 - திருவள்ளுவர் ஆண்டு 2057 - ஆனி 07 - ஞாயிற்றுக்கிழமை 21 ஜூன் 2026 - வெளியீடு 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 310 : Thiruvalluvar Year - 2057 - Aani 07 - Sunday 21 June 2026 - Dak 8 Pages ₹ 5.00


## குடியரசுத் தலைவர்

# திருமதி திரவுபதி முர்முக்கு பிறந்தநாள்!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

சென்னை, ஜூன் 21 -

குடியரசுத் தலைவர் திருமதி திரவுபதி முர்மு அவர்களின் பிறந்தநாளையொட்டி, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது சமூக வலைதளப் பதிவில் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தி வருமாறு : -

**மாண்புமிகு குடியரசுத் தலைவர் திருமதி திரவுபதி முர்மு அவர்களுக்கு எனது பிறந்தநாள் வாழ்த்துகள்.**

**எளிய பின்னணியில் இருந்து இந்தியாவின் குடியரசுத் தலைவராக உயர்ந்த தங்களது வாழ்க்கைப் பயணம் இந்தியா முழுவதும் பல இலட்சம் பேருக்கு ஊக்கமளிக்கும் ஒன்றாகும். பணிவும், விடாமுயற்சியும், அமைதியான வலிமையும் கொண்டதாக தங்களது பொது வாழ்க்கை அமைந்துள்ளது.**

**தாங்கள் நீண்ட காலம் நல்ல உடல்நலத்தோடும் மகிழ்ச்சியோடும் திகழ விழைகிறேன்.**



இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது வாழ்த்துச்செய்தியில் கூறியுள்ளார்.

# கட்சி தாவிய எம்.பி.க்கள் 20 பேரை தகுதி நீக்கம் செய்க!

## மக்களவை சபாநாயகரிடம் திரிணாமுல் காங்கிரஸ் மனு!

புதுடெல்லி, ஜூன் 21 -

கட்சி தாவிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் 20 பேரை தகுதி நீக்கம் செய்யக் கோரி மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லாவிடம் திரிணாமுல் காங்கிரஸ் மனு அளித்துள்ளது.

திரிணாமுல் காங்கிரஸ் தலைவர் மம்தா பானர்ஜிக்கு எதிராக போர் கொடி உயர்த்திய 20 மக்களவை உறுப்பினர்கள், தங்களைத் தனிக் குழுவாக அங்கீகரிக்கக் கோரி சபாநாயகரிடம் மனு அளித்துள்ளனர்.

மேலும், அவர்கள் தேசிய வாத இந்திய குடிமக்கள் கட்சி என்ற சிறிய கட்சியுடன் தங்களை இணைத்துக் கொண்டு, பா.ஜ.க. தலைமையிலான என்.டி.ஏ. கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் மக்களவைக் குழுத் தலைவர் அபிஷேக் பானர்ஜி, சபாநாயகர் ஓம் பிர்லாவைச் சந்தித்து, அதிருப்தி எம்.பி.க்கள் 20 பேரையும் தகுதி நீக்கம் செய்வதற்கான மனுக்களை அளித்தார்.

அரசியல் சாசனத்தின் 10வது அட்டவணையின்படி, ஒரு கட்சியின் சின்னத்தில் போட்டியிட்டு வென்ற உறுப்பினர்கள், கட்சியின் உறுப்பினர் பதவியைத் துறந்தால் அவர்கள் தகுதி நீக்கத்திற்கு உள்ளாவார்கள் என்றும், இதன்படி 20 பேரையும் தகுதி நீக்கம் செய்ய வேண்டும் என்றும் அந்த மனுவில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

உச்ச நீதிமன்றத் தீர்ப்புகளை மேற்கோள் காட்டி, இந்த தகுதி நீக்க மனுக்கள் மீது சபாநாயகர் மூன்று மாதங்களுக்குள் முடிவெடுக்க வேண்டும் என திரிணாமுல் காங்கிரஸ் வலியுறுத்தியுள்ளது.

## பேரவை நடவடிக்கைகளின் நேரலை இருட்டடிப்பு!

# சட்டப்பேரவை உறுப்பினர்களை அவமானப்படுத்தும் செயலாகும்!

## பேரவைத் தலைவருக்கு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கடிதம்!

**சென்னை, ஜூன் 21-**

**“சட்டப்பேரவை நடவடிக்கைகள் நேரலை செய்யப்படுவதை இருட்டடிப்பு செய்வது சட்டப் பேரவை உறுப்பினர்களை அவமானப் படுத்தும் செயலாகும்” என்று சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேரவைத் தலைவர் அவர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் கூறியுள்ளார்.**

இதுகுறித்து சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சட்டமன்ற நேரலை குறித்து, சட்டப்பேரவைத் தலைவர் அவர்களுக்கு நேற்று எழுதியுள்ள கடிதம் வருமாறு :-



தமிழ்நாடு சட்டப்பேரவையின் நடவடிக்கைகள் நேரலை செய்யப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் அளித்த வாக்குறுதிக்கு மாறாக, தற்போது நடைபெற்று வரும் மாண்புமிகு ஆளுநர் உரை மீதான விவாதம் நேரலை செய்யப்படுவதில்லை என்பதைத் தங்களது மேலான கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

“கொடுத்த வாக்கைக் காப்பாற்றியுள்ளார் முதலமைச்சர். இரண்டு, மூன்று ஆண்டுகளாக இருட்டடிப்புச் செய்யப்பட்ட சட்டப்பேரவை நேரலை, மீண்டும் தொடங்கியிருக்கிறது. இனி சட்டப்பேரவை நேரலை தொடரும். இது ஜனநாயகத்திற்கு மிகப்பெரிய எடுத்துக்காட்டு. வெளிப்படைத்தன்மை மற்றும் நேர்மையான நிர்வாகத்திற்கு இன்றைய நிகழ்வு மிகப்பெரிய எடுத்துக்காட்டு” என அமைச்சர் ராஜ்மோகன் குறிப்பிட்டுச் சொன்ன அன்றே நேரலை துண்டிக்கப்பட்டிருக்கிறது.

### மக்கள் பிரதிநிதிகளின் குரலை மறைப்பதாகும்!

நேற்றைய தினம் (19.06.2026) மேகதாது அணை கட்டுவதைக் கண்டித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்த அரசினர் தீர்மானத்தின் மீதான விவாதங்கள் நேரலை செய்யப்பட்டன.

அடுத்து, உடனடியாக இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு ஆளுநர் உரை மீதான விவாதங்கள் தொடங்கிய நிலையில் அவை இருட்டடிப்புச் செய்யப்பட்டுள்ளன. ஆளுநர் உரை மீதான விவாதம் நேரலை செய்யப்படவில்லை.

இது இன்றைய ஆளுங்கட்சி கொடுத்த வாக்குறுதிக்கு மாறானது ஆகும்; மக்கள் பிரதிநிதிகளின் குரலை மறைப்பது ஆகும்; சட்டமன்ற மாண்பைக் குலைப்பதாகும்.

### சட்டமன்ற ஜனநாயகத்திற்கு உகந்தது இல்லை!

நேரலை நிறுத்தப்பட்டது மிகப்பெரிய தவறு என்றால், அதைவிடப் பெரிய தவறு பின்னர் இழைக்கப்பட்டுள்ளது. எதிர்க்கட்சியினரின் விவாதங்கள் முற்றிலும் இருட்டடிப்புச் செய்யப்பட்டு, ஆளுங்கட்சியினருக்கு வேண்டிய விவாத வீடியோக்கள் மட்டும் Edit செய்யப்பட்டு மாலையில் வெளியிடப்பட்டுள்ளன. பேச்சுரிமையை,


தொடர்ச்சி 3ஆம் பக்கம்


## ‘நீட்’ தேர்வை ரத்து செய்யக் கோரி

# ஆளுநர் மாளிகையை முற்றுகையிட்ட மாணவர்கள்!

## காவல்துறை அராஜகம்! கண்மூடித்தனமாக தாக்குதல்! விரட்டி, விரட்டி கைது செய்தனர்!



**சென்னை, ஜூன் 21 -**

**‘நீட்’ நுழைவுத் தேர்வை ரத்து செய்யக் கோரி சென்னையில் ஆளுநர் மாளிகையை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களை, விரட்டி, விரட்டி சென்று தடியடி நடத்தி போலீஸார் கைது செய்ததால் பதற்றம் நிலவியது.**

‘நீட்’ தேர்வை ரத்து செய்யக் கோரி சென்னையில் ஆளுநர் மாளிகையை முற்றுகையிட்டு மாணவர் அமைப்புகள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நூற்றுக்கணக்கான மாணவ, மாணவிகள் பங்கேற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில், ‘நீட்’ முறைகேடுகளுக்கு பொறுப்பேற்று ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்தினர்.

மேலும், சமூக நீதிக்கு எதிரான ‘நீட்’ தேர்வை ரத்து செய்து, மாணவர்களின் கல்வி உரிமையை பாதுகாக்க வேண்டும் என போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் முழக்கமிட்டனர்.

மாணவர்களின் உயிர்களை காவு வாங்கும் நீட் தேர்வு எனும் அரக்கனை ரத்து செய்யக்கோரி சாலையில் அமர்ந்து தர்ணாவில் ஈடுபட்டனர்.

மாணவர்களை விரட்டி, விரட்டி கைது செய்த போலீசார், மாணவர்களை குண்டுக்கட்டாக தூக்கிச் சென்று, கைது செய்தனர்.

மாணவர்கள் மீது அராஜகத்தை ஏவிவிட்ட காவல்துறையினர், போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் தள்ளுமுள்ளுவில் ஈடுபட்டனர்.

மாணவர்களை காவல் துறையினர் கண்மூடித்தனமாக தாக்குதல் நடத்தி விரட்டியடித்தனர்.

பின்னர், மாணவர்களை காவல் துறையினர் தரதரவென இழுத்துச் சென்றும் விரட்டி, விரட்டி சென்றும் கைது செய்தனர். இதனால் சின்ன மலை பகுதியில் பதற்றம் நிலவியது.

### த.வெ.க. அரசுக்குக் கண்டனம்!

ஜனநாயக முறைப்படி போராட்டத்தில் ஈடுபட்ட தங்களை, த.வெ.க. ஆட்சியின் காவல்துறை கைது செய்ததற்கு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கண்டனம் தெரிவித்தனர்.

### எழும்பூரில் ஆரப்பாட்டம்!

இதனிடையே, நீட் தேர்வை ரத்து செய்யக்கோரி சென்னை எழும்பூரில் அகில இந்திய மக்கள் இயக்கம் சார்பில் போராட்டம் நடைபெற்றது. ராஜ ரத்தினம் மைதானம் அருகே நடைபெற்ற இந்த போராட்டத்தில், தி.மு.க. முன்னாள் அமைச்சரும், அகில இந்திய மக்கள் இயக்க ஒருங்கிணைப்பாளருமான மனோ தங்கராஜ், குடியுரிமை பாதுகாப்பு இயக்கம் கே.பாலகிருஷ்ணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.


தொடர்ச்சி 3ஆம் பக்கம்